**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ஒ.மு.எண்.487/ஆ5/2025, நாள். 06/02/2025**

.....

பொருள் பள்ளிக் கல்வி – உறுதிமொழி – கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பு தினத்தினை முன்னிட்டு 07.02.2024 அன்று 11.00 மு.ப. – உறுதிமொழி எடுப்பது – தொடர்பாக

பார்வை
1. அரசாணை எண். (1டி) 448, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் (யு1) துறை நாள். 23.09.2020
2. சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண். 007586/இ/இ1/2025, நாள். 05.02.2025

.....

பார்வை 1–ல் காணும் அரசாணையில் ஒவ்வொரு வருடமும் பிப்ரவரி 9–ம் தேதி அன்று "கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பு தினம்" அனுசரிக்கப்படும் என ஆணை வெளியிடப்பட்டுள்ளது. 2025 பிப்ரவரி 9ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை என்பதால் 07.02.2025 அன்று வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு உறுதிமொழி எடுக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, அனைத்து வகை பள்ளிகளில் / அலுவலகங்களில் பணிபுரியும் ஆசிரியர் பெருமக்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்கள் அனைவரும் கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பு தினத்தினை முன்னிட்டு 07.02.2025 அன்று காலை 11.00 மணிக்கு உறுதிமொழியினை மேற்கொள்ளுமாறும், அதனை புகைப்படம் எடுத்து b5secceovellore@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – உறுதிமொழி வாசகம்

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

06-02-25

பெறுநர் –
தலைமையாசிரியர்,
அனைத்து வகை பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.

நகல் –
1. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர், (இடைநிலை / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்) (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு அனுப்பப்படுகிறது) (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)